அருந்ததியர் விடுதலைக்கு தொலை நோக்கு பார்வைகொண்டு
அதியமான் அண்ணா தாங்கள்
வாழ்நாளை செலவழித்து வளர்த்திருக்கும் ஆலமரம்
அகல விரிந்து படர்ந்து வளர்ந்து விட்டால்,
ஆங்காங்கு முளைத்திருக்கும் அருந்ததிய செடி கொடிகள்,
சாதிய நுகத்தடியில நசுக்கப்பட்டு வெந்து புழுங்கும்
அருந்ததிய மக்களுக்கு முட்டிமோதி நிழல் கொடுக்க
முயலும் மொட்டை பனை மரங்கள்,
தாங்கி நிற்கும் விழுதுகளாய் தானாக இணைந்துவிடும்.

அதன் ஊடே வளர்ந்து நின்று பயிர்போல பாவணையில்
கட்டப் பஞ்சாயத்து நடத்தி ஏமாற்றி
காசு கறக்கும் களைகளும் காணாமல் கருகிவிடும்.

அருந்ததிய மக்கள் எல்லாம் ஊர் கூடி
அடரந்து வளர்ந்த மர நிழலில் இளைப்பாறி
தெம்புற்று தெளிவு கண்டு,
நின் கருத்துச் செறிவு மிக்க கனல் தெறிக்கும் நெருப்புரையை உள்வாங்கி,
வஞ்சனையாய் நம் மீது சுமத்தப்பட்ட சாதிய இழிவுகளை உணர்ந்து
கொதித்து எழுந்து போர் முரசு கொட்டி,
ஆதிக்க சாதிகளை வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்தி
சம நீதி சமதர்மம் சமுதாயம் அமைத்திடுவோம்.

தாங்கள் வளர்த்திருக்கும் ஆலமரம் அடர்ந்து விரிந்து படர்ந்து வளர,
ஏற்றிடுவீர் இந்த தம்பியின் ஒரு சொம்பு தண்ணீரை.

-செல்வா